**கம்பனி நிதியம் - 2023**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பனி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த

வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 17 மற்றும் 96 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மென்பொருள் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்யும் (e-ROc) ரூபா 54,962,000 கிரயமான சொத்துக்களாக இனங்காணப்பட்டு அவற்றின் பயன்படு ஆயட்காலத்தினுள் பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 10,067,354 மற்றும் கடந்த வருடங்களில் மேற்கொண்ட ரூபா 16,883,062 ஆன பராமரிப்பு மற்றும் உதவிச் சேவை கட்டணம் செலவினமாக கணக்கு வைக்கப்படாது நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் e-Roc கணினி கட்டமைப்பினை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் ஊடாக நடைமுறை வேலைக் கணக்கில் உள்ள e-Roc கணினிக் கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் உதவிச் சேவைகள் செலவினங்கள் திரண்ட நிதியத்திற்கு சீராக்குவதற்கு மற்றும் மூலதனமாக்கப்பட்ட திகதியிலிருந்து பெறுமானத்தேய்விடுவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப் பட்டது என்பது. | கிரயத்தினை சரியாக கணக்கு வைப்பதற்கும், கட்புலச் சொத்துக்களின் பயன்படு ஆயட்காலத்தினுள் பெறுமானத் தேய்விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேறிய தேறக்கூடிய பெறுமதியான ரூபா 71,018,000 தொகைக்கு கணக்கு வைக்கப்பட்ட முதலீடு முதிர்வடையும் போது கிரயமான ரூபா 74,998,966 தொகை முதலீட்டு கணக்கிலிருந்து அகற்றப்பட்டமையால் ரூபா 3,980,966 இனால் முதலீட்டு மற்றும் வட்டிக் கணக்குகளின் மீதி குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தேறிய தேறக்கூடிய பெறுமதிக்கு கணக் கு வைக்கப்பட்ட முதலீடு, முதிர்வு காலத்தின் கிரய மதிப்பில் முதலீட்டுக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டமையால் முதலீடு மற்றும் வட்டிக் கணக்குகளின் மீதி குறைடைந்துள்ளமை. | முதலீடுகள் முதிர்ச்சியடையும் போது சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | தேறிய தேறக்கூடிய பெறுமதிக்கு கணக்கு வைக்கப்பட்ட ரூபா 9,455,000 தொகையான கலைக்கப்பட்ட காசு முதலீடுகள் முதிர்வடையும் போது ரூபா 9,978,750 கிரயம் முதலீட்டுக் கணக்கிலிருந்து அகற்றப்பட்ட காரணத்தால் ரூபா 523,750 இனால் முதலீட்டு மற்றும் செலுத்த வேண்டிய வட்டி – கலைத்தல் கணக்குகளின் மீதிகள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளினுள் திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது என்பது. | முதலீடுகள் முதிர்வடையும் போது சரியான கண்கககு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கணினிக் கட்டமைப்பை மாதாந்தம் பராமரித்தல் மற்றும் உதவிச் சேவை செலவினம் ரூபா 1,200,000 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | *-என்று -* | கணக்கு ஆண்டுக்குரிய மொத்த செலவினத்தை சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | கலைப்பாளர்களின் வைப்புக்களிலிருந்து கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட முதலீடுகளுக்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1,168,849 தொகையை முதலீட்டு கணக்கிற்கு கணக்கு வைக்கப்பட்ட வழுவை திருத்தும் போது, அந்த தொகை செலுத்த வேண்டியவ ட்டி - கலைத்தல் கணக்கிற்கு கணக்கு வைக்கப்படாது திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளினுள் திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது என்பது. | கிடைக்கும் வட்டியை சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (ஊ) | கணினி மென்பொருள் கட்டமைப்பில் சேர்ப்பதற்காக தரவுகளை ஸ்கேன் செய்வதற்கு செலவழிக்கப்பட்ட ரூபா 81,291,355 தொகை எதிர்காலத்தில் பொருளாதார பலன்களைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால், அது கட்புலச் சொத்தாகக் கணக்கிடப்படுவதற்குப் பதிலாக முந்தைய ஆண்டில் செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | அது ஒரு சொத்தாக அங்கீகரிக்க போதிய ஆதாரம் இல்லாததால், திரட்டப்பட்ட நிதியத்திலிருந்து முந்தைய ஆண்டில் செலவாக எழுதப்பட்டது. | எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகளை உருவாக்கும் சாத்தியம் இருப்பதால், அது ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) இணையவழி வருமானம் சேகரிக்கப்பட்டு (Gateway) வங்கிக் கணக்கிற்கு கடந்த வருடங்களில் கிடைத்த வைப்புக்கள் ரூபா 908,212 மற்றும் ரூபா 193,953 மீள் செலுத்தல்கள் மீளாய்வாண்டின் போதும் இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக, எதிர்காலத்தில் வங்கியுடன் ஒரு கூட்டம் கூட்டப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி நிலைமையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இணையவழி வருமானம் திரட்டும் தற்காலிக நடைமுறைக் கணக்கு மூலம் வைப்புகள் மற்றும் பணத்தைத் திரும்பப்பெறுதல் ஆகியவை மாதந்தோறும் இணக்கம் செய்யப்பட்டு சரியான வருமானம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் | | | |
| (i) 473 ஆம் பிரிவு | பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்றாலும், பதிவேட்டிற்கு பதிலாக கணினி அமைப்பிலிருந்து பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கையை துல்லியமாக கண்டறிய முடியவில்லை. | இவை கையேடு தரவு கணினிமயமாக்கலின் போது ஏற்பட்ட பிழைகள் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் கணினி ஏற்கனவே முழுமையாக செயல்படுவதால் (Real Time) பிழைகளை திருத்துவது மிகவும் உன்னிப்பாக செய்யப்பட வேண்டும், இதனால் தரவு கிரமமான முறையில் திருத்தப்படுகின்றது என்பது. | சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். |
| (ii) 492 மற்றும் 498 ஆம் பிரிவுகள் | மாதிரி பரிசோதனையின் போது, 7 வெளிநாட்டு கம்பனிகள் 01 முதல் 11 ஆண்டுகள் வரை கடந்திருந்த போதிலும நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்து சட்டத்தின்படி செயல்படவில்லை. | பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வெளிநாட்டு கம்பனியும் அதன் நிதிக்கூற்றுக்களை கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும், ஒவ்வொரு நாட்டிலும் தற்போதுள்ள சட்டங்களின் தன்மை காரணமாக, ஒரு குறிப்பிட்ட வெளிநாட்டு கம்பனியை இந்த நாட்டின் விபரங்களின் பிரகாரம் வ/ப கம்பனியாக கருத முடியுமா என்பதைத் தீர்மானிப்பது கடினமானது என்பது. | சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2017 நவம்பர் 17 மற்றும் 2021 பெப்ரவரி 03 ஆந் திகதிய முறையே 2045/56 ஆம் இலக்க மற்றும் 2213/35 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கிள் உள்ளடக்கப்பட்டு ள்ள கட்டளைகள் | 200,000 அமெரிக்க டாலர்கள் நேரடி முதலீட்டு கணக்கில் (AII) வைப்புச் செய்யப்பட்டு, கம்பனியின் புத்தகங்களில் முதலீடாக பதிவு செய்யப்பட்டு முதலீடுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கம்பனிப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும் என்றாலும், 28 பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு கம்பனிகள் அந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்கவில்லை. | இப்போது ரத்து செய்யப்பட்ட பரிமாற்ற கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின் கீழ் கிளை கம்பனியொன்றாக (Branch Office) குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டுக் கம்பனிகள் தொடர்பில் மாத்திரம் இந்த தேவைப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என்பது. | கிளைக் கம்பனியொன்றாக (Branch Office) குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலிடப்பட்டுள்ள வெளிநாட்டு கம்பனிகள் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள் ளஉத்தரவுகளின்படி கையாளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 849,379,158 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 581,481,421 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 267,897,737 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கம்பனி பதிவாளர் நாயகத்தின் பெறுவனவுகள் ரூபா 220,765,165 இனால் மற்றும் திறைசேரியின் பிணைமுறி வட்டி வருமானம் ரூபா 74,488,537 இனால் அதிகரித்தமை முக்கியமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் போது ஈ சர்விசஸ் லங்கா கம்பனி தாபிக்கப்பட்டதுடன் இணைந்ததாக 35 சதவீதமான அரச பங்களிப்பிற்காக அந்த கம்பனியின் சராசரிப் பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக வர்த்தக, விற்பனை மேம்படுத்தல், கூட்டுறவு மற்றும் பாவனையாளர் சேவைகள் அமைச்சின் செயலாளரின் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 90,275,000 ஆன தொகை முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், முதலீட்டு திகதியிலிருந்து மீளாய்வாண்டு வரையிலும் எதுவித பிரதிபலனும் கிடைத்திருக்காததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கம்பனி அதிகாரச்சட்டத்தின் 131(1) ஆம் பிரிவின் பிராகரம் சமர்ப்பிக்கப்பட்ட | 2007.03.09 ஆந் திகதிய இலக்கம்: ரீ.எம்.சி.சீ/2007/04 மூலம் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் இந்த பணத்தை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு செலுத்தியது.<br><br>அதன்படி திணைக்களம் அமைச்சுக்கு பணத்தை மாத்திரம் வழங்கியுள்ளதுடன் திணைக்களக் கணக்குகளில் முதலீடாக உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அமைச்சுக்கு வழங்கப்பட்ட கடனாகக் கருதி அமைச்சு செய்த முதலீடாகக் கருதுவதே பொருத்தமானதாகும். | பங்கு முதலீடு செய்யப்பட்ட கம்பனியின் நிலவுகை மற்றும் பங்குகளின் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதிரிப்படிவம் 15 இன் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் பெயரில் பங்குரித்து காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கம்பனி சட்டத்தின் 131 (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டுக்காக 129,229 பதிவு செய்யப்பட்ட கம்பனிகளிலிருந்து 16,643 கம்பனிகள் மாத்திரம் ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்திருந்ததுடன், 2007 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் ஆண்டறிக்கைகளை சமர்ப்ப்பிக்க வேண்டிய 564,872 கம்பனிகள் காணப்பட்டதுடன், அவற்றுள் 552,344 கம்பனிகள் மீளாய்வாண்டின் போதும் அந்த ஏற்பாடுகளை தவிர்த்திருந்தன. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 3,058,678,000 ஆக காணப்பட்டது. | கணக்காய்வு ஐயவினா சரியானது மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது. | ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதை ஊக்குவிக்கவும், ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்காத கம்பனிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவும், நிலுவைத் தொகையை வசூலிக்கவும் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும். |
| (இ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் தனியார் அல்லாத எல்லா கம்பனிகளினதும் நிதிக்கூற்றுக்கள் கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அந் விதிக்கமைய செயற்பட்ட கம்பனிகள் தொடர்பில் அறிக்கைகள் பேணப்படும் e-ROC கட்டமைப்பிலிந்து பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு தற்போது இந்தப் பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கும் e-Roc கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தவாறு உள்ளது. | பதிவு செய்யப்படாத கம்பனிகளின் எண்ணிக்கையைக் கட்டமைப்பின் ஊடாக கண்டறிய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **e-Roc கட்டமைப்பு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.** | | |
| (i) | திணைக்களத்தின் கணினி கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தின்படி, பராமரிப்பின் இரண்டாம் ஆண்டளவில் தரவுக் கட்டமைப்பை செயற்படுத்தும் முழுமையான பணி திணைக்களத்தினால் | திணைக்களத்தின் தகவல் தொழிநுட்ப சேவையில் பல வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் தற்போது நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் உள்ளதுடன், ஏனைய | தரவு கட்டமைப்பை சுயாதீனமாக செயற்படுத்தும் இயலுமை திணைக்களத்திடம் காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2023 திசெம்பர் மாதமளவில் கட்டமைப்புகளை முகாமை செய்யும் மென்பொருள் கட்டமைப்பை உருவாக்கிய அதே நிறுவனத்தால் இந்த கட்டமைமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் போதிய பதவியணியின்றி கணினியை நிர்வகிப்பது சிரமமாக உள்ளமையால், கட்டமைப்பை படிப்படியாக நிர்வகிக்கும் பணியை திணைக்களத்திற்கு பொறுப்பேற்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ii) | அறிக்கைகளைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட அறிக்கை தொகுதி (Report Module) மூலம் தினசரி, மாதாந்திர, வருடாந்த வருமான அறிக்கைகள், நிலுவையில் உள்ள வருமான அறிக்கைகள் மற்றும் வருமான வகைப்பாடு ஆகியவற்றைப் பெற முடியவில்லை. | நாளாந்த, மாதாந்த, வருடாந்த வருமான அறிக்கைகள் மற்றும் நிலுவை வருமான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் கட்டமைப்பை தயார் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு, மென்பொருள் அபிவிருத்தி செய்யும் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அனைத்து அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் கணினி கட்டமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | 2021 ஆம் ஆண்டின் போமு ஈட்டு முறிகளின் கோவைகள் ஸ்கேன் (Scanning) செய்யப்பட், குறியீடு இடுவதற்காக (Indexing) ரூபா 4,719,120 செலுத்தப்பட்டுள்ள போதிலும், அந்த e-Roc கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காத (Migrate) காரணத்தால் ஈட்டு முறிப் பிரிவின் கீழ் உள்ள மாதிரிப் படிவ இலக்கம் 11 இன் கீழ் இந்த தரவுகளை பயன்படுத்துவோருக்கு பரிசோதிக்க முடியாத வழுவை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் தற்போது மென்பொருள் அபிவிருத்தி செய்யும் நிறுவனத்திற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், eRoc கட்டமைப்பின் உதவி மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்கும் காலப்பகுதியில் இனங்காணப்படும் பிரச்சினைகள் அந்தந்த சந்தர்ப்பங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேற்கொண்ட செலவினத்திற்குரிய சேவையினை பெற்று கட்டமைப்பினை அபிவிருத்தி செய்ய வேண்டும். |
| (iv) | e–Roc கட்டமைப்பின் தரவுகளின் பாதுகாப்பு மற்றும் கட்டமைப்பு செயலிழக்கும் சந்தர்ப்பத்தில் செயற்பாட்டை தடையின்றி பேணுவதற்கு DRS வசதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | DRS வசதிக்கான பெறுகை நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளது என்பது. | e–Roc கட்டமைப்பிற்காக DRS வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | e–ROC கணினி செயற்திட்டத்திற்க உரியதாக பராமரிப்பு மற்றும் உதவிச் சேவைகள் கட்டணம் 2022 செப்தம்பர் முதல் ரூபா 540,971 இலிருந்து ரூபா 1,281,250 வரை அதிகரிப்பதற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்காக நியமிக்கப்பட்ட மதியுரையாளர் ஒட்டுமொத்த கட்டமைப்பு பற்றியும் ஆராயாது இந்த கட்டணத்தை | கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினித் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆலோசகர் சுட்டிக்காட்டிய விடயங்கள் உடன்படிக்கைக்கு உள்ளடக்கப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமை. | சம்பந்தப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரிப்பதன் நியாயத்தன்மை தொடர்பில் கருத்து தெரிவிக்க முடியாது என்பதும், கட்டமைப்பு கணக்காய்வு (System Audit) மேற்கொண்டு கட்டமைப்பின் குறைபாடுகள் இனங்காணப்பட வேண்டும் என்பதும், மாதாந்த கொடுப்பனவுகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வதற்கு மாதாந்த கொடுப்பனவு திட்டமொன்று உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும் என் வழங்கப்பட்ட பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | e–ROC செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,088,220 பெறுமதியான 10KAV ரகத்திலான Online UPS. அலகுகள் (unit) 04 இற்காக மற்றும் 60 மின்கலங்கள் பயன்படுத்தப்படாது 05 வருடங்களான காலம் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டமை. | கோவிட் தொற்றுநோய் காரணமாக, பயன்பாடு தாமதமானது மற்றும் அதை வேறு இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று திணைக்களம் அறிவித்தது, எனவே இந்த கருவிகளை நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை, இப்போது இதற்கு அதிக நேரம் கடந்துவிட்டது என்பதால் விசேட குழுவொன்றை நியமித்து பயன்படுத்துவதற்கு பொருத்தமானதா அல்லது விற்பனைக்கு உகந்ததா என்பது தீர்மானிக்கப்படும் என்பது. | சொத்துக்களை திறம்பட பயன்படுத்த வேண்டும். |